

தேர்தல் பிரச்சாரத்தின் போது காந்திகிராமம் ஊராட்சி சாமியார்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி மூலம் நலத்திட்ட உதவிகளைப் பெற்ற மாற்றுத்திறனாளி பெண் விஜயலட்சுமி, அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு நன்றி தெரிவித்ததோடு சி.பி.எம். வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்திற்குத்தான் அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்களிப்பேன் என்று கூறி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.



கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களின் தந்தை மறைந்த முத்தூர் சா.பெருமாள்சாமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கனிமொழி மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் வீட்டு வசதித்துறை அமைச்சர், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற கழக வேட்பாளர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இ.கே.பிரகாஷ், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், கழக மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி, மாவட்ட துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து

# ராணிப்பேட்டை முத்துக்கடையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்குச் சேகரிப்பு!

## அமைச்சர் ஆர்.காந்தி - கழக கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு !

அரக்கோணம், மார்ச் 30-

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் ஜெகத்ரட்சகனை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ராணிப்பேட்டை முத்து கடையில் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது :-

இராணிப்பேட்டை நாடாளுமன்ற தொகுதியில் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 9 ஆயிரம் கோடியில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இராணிப்பேட்டை சிப்காட்டில் ரூ.14.5 கோடி மதிப்பீட்டில் அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சிப்காட் பகுதியில் உள்ள குரோமிய கழிவுகளை அகற்ற ரூ.11 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. குரோமிய கழிவுகளை நிரந்தரமாக அகற்ற ரூ.5.45 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை புதிய பேருந்து நிலையம் ரூ.20 கோடியில் கட்டப்பட்டுள்ளது. அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் பணப்பாக்கம் பேரூராட்சியில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் காலணி தொழிற்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்சாலை விரிவாக்கம் பணிக்கு ரூ.140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சோளிங்கர் அரசு மருத்துவமனை ரூ.3 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை தொகுதிக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அளித்த வாக்குறுதியின் படி நகரி - திண்டிவனம் ரெயில் பாதை அமைக்கப்படும். விவசாய கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றிய அரசின் தொழிற்சாலைகள் அமைக்கப்படும். அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

உடன் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் ஏ.வி. சாரதி , ஆற்காடு நகர தி.மு.க. செயலாளர் ஏ.வி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

ஆற்காடு பஸ் நிலையத்திலும் வேட்பாளர் ஜெகத்ரட்சகனுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரித்தார்.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் நகரத்தைச் சேர்ந்த ரா.ராஜதுரை அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 28-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### பஞ்சாப்பில்

# சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க பா.ஜ.க. முயற்சி!

## ஆம் ஆத்மி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 30-

பஞ்சாப் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சி கவிழ்ப்புக்கு பா.ஜ.க. முயற்சிப்பதாக ஆம் ஆத்மி கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் முதலமைச்சர் பகவந்த் மான் தலைமையிலான ஆம் ஆத்மி அரசு ஆட்சி செய்து வருகிறது. இந்த நிலையில், பஞ்சாபைச் சேர்ந்த ஆம் ஆத்மி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில்குமார் ரிங்கு, சட்டமன்ற உறுப்பினர் ஷீத்தல் அங்குரால் ஆகியோர் நேற்று, பா.ஜ.க.வில் இணைந் தனர். இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சுகா தாரத்துறை அமைச்சர் சௌரப் பரத்வாஜ், பஞ்சாப் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சி கவிழ்ப்புக்கு பா.ஜ.க. முயற்சிப்பதாக குற்றம்சாட்டினார்.

மேலும், ஆம் ஆத்மி எம்எல்ஏக்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பா.ஜ.க.வில் இணைய பணம் மற்றும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மற்றும் ஒய் பிளஸ் பாதுகாப்பு வழங்குவதாக ஆசை வார்த்தை கூறுவதாக வும் தெரிவித்தார்.

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 30.03.2024 (சனிக்கிழமை) | - | சேலம் |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | திருச்சி |
| 03.04.2024 (புதன் கிழமை) | - | சிதம்பரம் |
| 06.04.2024 (சனிக் கிழமை) | - | சென்னை, திருபெரும்புதூர் |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - | சென்னை |
| 10.04.2024 (புதன் கிழமை) | - | மதுரை |
| 11.04.2024 (வியாழக் கிழமை) | - | தூத்துக்குடி |
| 14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை) | - | திருப்பூர் |
| 15.04.2024 (திங்கட் கிழமை) | - | கோவை |
| 16.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | பொள்ளாச்சி |

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.04.2024 | - | கன்னியாகுமரி |
| 02.04.2024 | - | திருநெல்வேலி |
| 03.04.2024 | - | தூத்துக்குடி |
| 04.04.2024 | - | தென்காசி |
| 05.04.2024 | - | விருதுநகர் |
| 06.04.2024 | - | தேனி |
| 07.04.2024 | - | மதுரை |
| 08.04.2024 | - | இராமநாதபுரம் |
| 09.04.2024 | - | இராமநாதபுரம் |
| 10.04.2024 | - | சிவகங்கை |
| 11.04.2024 | - | தஞ்சாவூர் |
| 12.04.2024 | - | பெரம்பலூர் |
| 13.04.2024 | - | சேலம் |
| 14.04.2024 | - | நாமக்கல் |
| 15.04.2024 | - | ஈரோடு |
| 16.04.2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வழக்கறிஞர் அருள்மொழி தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024ஏப்ரல்-19அன்றுநடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வழக்கறிஞர் திருமதி அருள்மொழி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 30-03-2024 | - | திருப்பெரும்புதூர் |
| 31-03-2024 | - | மத்திய சென்னை |
| 02-04-2024 | - | காஞ்சிபுரம் |
| 03-04-2024 | - | தென்சென்னை |
| 04-04-2024 | - | வடசென்னை |
| 06-04-2024 | - | நீலகிரி |
| 07-04-2024 | - | ஈரோடு |
| 12-04-2024 | - | திருவண்ணாமலை |
| 13-04-2024 | - | கள்ளக்குறிச்சி |
| 14-04-2024 | - | சேலம் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக்கழகச்செயலாளர்கள்தங்களுக்குள்கலந்துபேசி, ஒன்றிணைந்து,பிரச்சாரம்தொகுதிவாக்காளர்களைசென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 28.3.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---



நாகை நாடாளுமன்றத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று பேசினார். கூட்டத்தில் வேட்பாளர் வை.செல்வராஜ், எம்.செல்வராஜ் எம்.பி.,தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கே.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, எம்.எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ்.பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பாலஞானவேல்,ப.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் செல்வா ஜெயதேவன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

